# இயேசு கிறிஸ்துவும், பரிபூரண இரட்சிப்பும்.

விலை அணா

1955

# இயேசு கிறிஸ்துவும் பரிபூரண இரட்சிப்பும்

## கிறிஸ்து அவதரித்ததின் நோக்கம்

இயேசு கிறிஸ்து உலகத்தில் அவதரித்தது மனிதனுக்குப் பரிபூரண இரட்சிப்பைக் கொடுப்பதற்கே. இதை அறிந்தே அப்போஸ்தலனாகிய பவுல், அவர் நம்மை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார் என்று எழுதி இருக்கிறார். எபி. 7: 25. ஆதலால் நாம் இயேசு கிறிஸ்துவினால் உண்டான பரிபூரண இரட்சிப்பை அனுபவிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகவே, ஜீவன் மனிதனுக்கு எவ்வளவு அவசியமாய் இருக்கிறதோ, பரிபூரண இரட்சிப்பும் அவனுக்கு அவ்வளவு அவசியமாய் இருக்கிறது.

பரிபூரண இரட்சிப்பை விசுவாசியாதவனும், ஏற்றுக் கொள்ளாதவனும், அதற்கென்று தன்னைப் பலியாக்கின கிறிஸ்துவுக்குத் தன்னைப் பரிபூரணமாய் ஒப்புக்கொடாதவனும், ஒரு விதமாய் தேவனை விசுவாசிக்கிறேன் என்று சொன்னாலும் நியாயத்தின்படி அவரை மறுதலிக்கிறவனும், ஏற்றுக் கொள்ளாதவனுமாயிருக்கிறான். இதை

ரூபம், தேவ ஆவி, தேவ மகிமை, தேவனோடு உறவாடும் அந்நியோன்னிய ஐக்யம், தேவனுடைய ஆசீர்வாதம், தேவனால் உண்டான அதிகாரம், நித்திய கால வாழ்வு முதலியவை. ஒரு விதமாய்ச் சொல்லப் போனால், தேவனும் மனிதனும் யாதொரு ஏற்றதாழ்வின்றி பரலோ ராஜ்யத்தில் சகல சந்தோஷங்களையும், தேவனோடு அனுபவிக்கும் பாக்கியத்தைப் போன்ற உரிமையையே இழந்தார்கள் என்று சொல்லலாம்.

அவனுடைய சந்ததியாராகிய நம்மைத் தேடவும், இரட்சிக்கவும் வந்த தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து, மனுஷனைத் தேவனிடத்தில் சேர்க்கவும், (எபி. 7:25) தேவனுடைய மகிமையில் கொண்டுவந்து சேர்க்கவும், (எபி.2:10) தேவனுடைய மகிமையுள்ள சந்நிதானத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடு மாசற்றவர்களாய் நிறுத்தவும் வந்தவரென்பதையும் (யூதா 24) அது மாத்திரமல்ல, அவரோடுகூட சிங்காசனத்தில் உட்காரக் கூடுமென்பதையும், (வெளி. 3:21) அவரோடுகூட ஆளுகை செய்யக் கூடுமென்பதையும், (வெளி 12:5) அவரோடுகூட எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளக் கூடுமென்பதையும், (வெளி. 21:7) அவர் வருகையில் அவரைத் தரிசிப்பதற்காக அவருக்கு ஒப்பாயிருப்பார்கள் என்பதையும், (1 யோ. 3:2) அவரது மகிமையே நித்தியகாலம் இவர்களில் விளங்குமென்பதையும், (1பேதுரு

5:10) குறிப்பாகச் சொல்லியிருப்பது, தேவன் மனுஷனை ஏதேனில் உண்டாக்கினபோது நம்மில் ஒருவனைப் போலானான் என்று சொன்னதற்கு இவை எத்தனையாய் ஒத்திருக்கின்றன.

## விசுவாசியாதவர்களுக்குத் தண்டனை.

ஆகவே, தேவன் மனுக்குலத்திற்கு நித்திய மீட்பை உண்டாக்கி, மனுஷ ஜாதி தம்முடைய சமுகத்தில் நித்திய காலம் இருக்கத் தக்கதான பாக்கியமான நிலவரத்தை உண்டாக்கியிருக்கும்பொழுது இதை அவிசுவாசிப்பவர்களுக்குக் கொடிய தண்டனையாகும் என்பது நிச்சயம். அதுமாத்திரமல்ல, இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்துக் கவலையற்றிருப்பவர்களும் தண்டனைக்குத் தப்பமாட்டார்கள் என்பது உறுதி. (எபி. 2:4)

ஆகவே, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய நாம், (எபி. 3:1) தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் இருக்கிற இயேசுகிறிஸ்துவின் (எபி. 12:2) மகிமையுள்ள சிங்காசனத்தில் அவரோடுகூட வீற்றிருக்கும் ஸ்தானத்தை (கொலோ. 3:1) அவிசுவாசத்தினாலோ, (எபி. 3:19) கீழ்ப்படியாமையினாலோ (எபி. 3:18) இழந்து, ஏசாவைப்போல்

பரிதாபமான நிலைமைக்கு வரத்தக்கதாக, அற்பமான உலக வாழ்வுக்காக நித்தியமான அழிவில்லாத மகிமையான பங்கை விற்றுப் போடாதபடிக்கும் (1பேது. 1:4) (எபி. 12:16,17) எச்சரிக்கையாய் இருப்போமாக.

தற்காலத்தில் அநேகர் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று எண்ணினாலும், கிறிஸ்தவப் போதகர்கள் என்று சொன்னாலும், அதே சமயத்தில் ஆதி அப்போஸ்தல சபையில் உண்டாயிருந்த மகிமையின் நம்பிக்கையை (கொலோ. 1:27) இழந்தவர்களாக ஜீவிக்கிறார்கள். இவர்கள் தேவனாலேயே சிருஷ்டிக்கப்பட்டவர்களாயிருந்தும், மகிமையை இழந்த ஆதாமும் ஏவாளும், தேவ சமுகத்தை விட்டுத் தாங்களே ஓடி ஒளிப்பார்கள் என்பது திண்ணம். (வெளி 6:15-17) ஆதலால் அன்றோ பாவிகள் நீதிமான்களின் சபையில் நிலைநிற்பதில்லை என்றும், மாயக்காரரை நடுக்கம் பிடிக்கிறது என்றும், துரோகிகளும் பாவிகளுமோ ஏகமாய் நொறுங்குண்டு போவார்கள்; கர்த்தரைவிட்டு விலகுகிறவர்கள் நிர்மூலமாவார்கள் (ஏசா. 1:28) என்றும் சத்திய வேதம் திட்டமாய்ச் சொல்லுகிறது.

ஆகவே தேவ தயவு, நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல் அவருடைய தயவு, நீடிய சாந்தம், இவைகளின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணி உன் மனக்

கடினத்திற்கும், குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளில், உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளாதே. (ரோமர் 2:4,5)

## விசுவாசித்துக் கீழ்ப்படிவதின் பயன்

இதை வாசிக்கும் பிரிய ஆத்துமாவே! தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தின் இலவசத்தை உன்னுடைய சுதந்தரமென்று நம்பி, நீ இருக்கிற நிர்ப்பந்தத்தோடு அவரிடம் வந்து யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் (யாக். 1:5) ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் தாழ்மையோடு ஆயக்காரனைப்போல் தாழ்த்தி, ஜெபித்து; நூற்றுக்கதிபதியைப்போல் விசுவாசிப்பாயானல், நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று சொன்ன இயேசு கிறிஸ்துவினுடைய வார்த்தையின்படி (யோ. 11:40) அவருடைய மகிமையின் இரட்சிப்பு உனக்குச் சொந்தமாகும்; சங்கீதக்காரனைப்போல் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து உமது வல்லமையையும், மகிமையையும் கண்டேன். (சங். 63:2) என்று சொல்லி கடைசியிலே இரட்சிப்பின் மகிமை எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று சொல்லி ஆர்ப்பரித்து, தேவரீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களி

லும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து எங்கள் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை இராஜக்களும், ஆசாரியர்களுமாக்கினீர். நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதுப்பாட்டைப் பாடுவாய் (வெளி. 7:10; 5:9,10)

இத்தனை மகிமையான அனுபவம் உன்னுடைய சுதந்தரமாகும்படி தேவனால் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, அவர் கிருபையாய் உன்னை அழைத்திருக்க நீ இன்னும் தேவனற்ற ஜீவியம் செய்ய, உன் மாமிசமும் மனதும் விரும்பினபடி நடக்க இப்பிரபஞ்ச மாய்கையிலே விழுந்து அழிய, சாத்தானுடைய பயங்கர கிரியைகளுக்கு இடங்கொடுக்கத் திரும்புவாயோ? திரும்பினால் அழுகையும், புலம்பலும் உன் பங்காகுமே. ஐயோ! அந்நாளில் நீ என்ன செய்வாய்? உனக்குக் கிடைக்கப்பட்ட இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்திற்கேற்றவைகளைத் தெரிந்து கொண்டால் உனக்கு நலமாயிருக்கும் என்று அன்று எருசலேமைப் பார்த்துக் கண்ணீர் விட்டழுத கர்த்தர் இன்று உன்னையும் பார்த்துக் கண்ணீர் விட்டழுகிறார் என்பதை மறவாதிரு.

ஆகவே இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சண்ய நாள், (2 கொரிந்தியர் 6:2) என்பதை

உணர்ந்து இயேசு கிறிஸ்துவுக்கும், அவருடைய ஜீவனுள்ள வசனத்திற்கும் ஒப்புக்கொடுத்து, பாவத்தினின்று விடுதலை பாகி, தேவனுக்கு அடிமையாகி, பரிசுத்தமாகுதலை உன் பங்காக்கி, நித்திய ஜீவனை உனக்குச் சொந்தமாக்கி, (ரோமர் 6:17, 23) அவரையே உன் அனுபவமாக்கி, அவரது ராஜ்யத்தையே உனக்குச் சொந்தமாக்கினால், நித்திய நித்திய காலமாக அழிவில்லாத தேவனுடைய இராஜ்யத்தில், அழிவில்லாத மகிமையின் சரீரத்தோடு இருக்க அருள் புரிவார்.

நீயும் சங்கீதக்காரனோடு சேர்ந்து, பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்திலே உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பம் இல்லை என்று சொல்லும் பாக்கியத்தை அடைவாயானால், ஏனோக்கைப் போல் இவ்வுலகத்தில் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்து, கடைசியில் அவருடைய மகிமையின் ராஜ்யத்தில் சதாகாலம் ஜீவிக்க, (ஆதி. 5:23, 24) ஒரு நிமிஷத்தில் ஒரு இமைப் பொழுதில் மகிமை அடைந்து மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்படுவாய். (1 கொரி. 15:51)

இவ்விதமாய் ஆதாம், ஏவாள் ஏதேன் தோட்டத்தில் இருந்ததுபோல நீயும் தேவனோடு எப்போதும் மோட்ச ராஜ்யத்திலிருப்பாய். (1 தெச. 4:17) பாவத்தில் அழிந்து

நித்திய நரக தண்டனையை அனுபவிக்க ஏதுவாயிருந்த பாவிகளை நித்திய மகிமையில் சேர்த்த அன்பை விவரிக்க யாரால் கூடும்? இவ்வித அன்பை அறிந்த ஆத்துமா, பர லோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராய் இருக் கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராய் இருக்கக் கட வீர்களென்ற (மத். 5:48) வசனத்தை நம்பி ஜீவித்து, ஜீவி யத்திலும், உபதேசத்திலும், கிறிஸ்துவினுடைய நிறை வான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண சிருஷ்டி யாகும்.

ஏதேனின் பாக்கியத்தை ஆதிப் பெற்றோர் இழந் தது தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதைவிட்டு சாத்தானுடைய வார்த்தைக்குச் செவி கொடுத்ததினாலாகும். நாம் தேவனால் உண்டான இரட்சிப்பை, இனிக்கிறிஸ்துவை விசுவாசிப்பதால் மாத்திரம் அடையக்கூடும். அவரில் அன் பாயிருக்கிறவன் அவருடைய கற்பனையைக் கைக்கொள்ளு வான். (யோ. 14:21, 23)

# இயேசுவை விசுவாசிப்பதெப்படி?

## இயேசுவே இரட்சகர்

இயேசுவை நமது இரட்சகராக அல்லது நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்த்து பாவமன்னிப்பை உண்டாக்கின தேவனாக விசுவாசிக்க வேண்டும். அப்படி விசுவாசிக்கும் போது (அப். 10:43ல்) சொன்னபடி பாவ மன்னிப்பைப் பெறுவோம். அப்பொழுது 1 யோ. 1:7-9ன் படி, பாவங்கள் மன்னிக்கப்பட்டு அநியாயங்கள் நீக்கப்பட்டு, நாம் சுத்திகரிக்கப்படுவோம். இயேசுகிறிஸ்து பாவத்தை மன்னிக்கிறவர் மாத்திரமல்ல, பாவம் மன்னிக்கப்பட்ட தமது பிள்ளைகளுடைய பாவ சுபாவத்தை நீக்கி, அவர்களைப் பரிசுத்தப் படுத்துகிறவராயும் இருக்கிறார். ஆதலால்தான் இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினால், அந்தச் சித்தத்தின்படி, நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம் என்றும், பரிசுத்த மாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார் என்றும், (எபி. 10:10,14) அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார் என்றும், சொல்லப்

பட்டிருக்கிறது. (1 கொரி. 1:31.) அவர் இந்தப் பரிசுத்தத்தைத் தரவே தம்முடைய ஆவியைக் கொடுத்தார். இரத்தத்தைச் சிந்தி சரீரத்தைப் பலியாக்கினார்.

இந்தப் பரிசுத்தமாகுதலை நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாயும், அவருடைய வசனமாகிய உபதேசத்தின் மூலமாயும், அவருடைய பரிசுத்தாவியின் மூலமாயும் அடையக்கூடும். நாம் நம்முடைய பாவங்களை உணர்ந்து, ஒத்துக்கொண்டு, மனஸ்தாபப்பட்டு, அறிக்கையிட்டு, விட்டுவிடத் தீர்மானித்து, அவருடைய கிருபையை விசுவாசிக்கும் பொழுது பாவ மன்னிப்பும், அவருடைய வசனத்துக்கு ஒப்புக் கொடுக்கும்போது சுத்தமாகுதலும் (யோ. 15:3) பரிசுத்தாவியின் அபிஷேகத்தைக் காத்திருந்து பெற்று, அது போதிக்கிற பிரகாரம் நடந்து, ஆவிக்குட்பட்டு ஜீவித்து ஆவியின் வரங்களைப் பெற்று, கனி கொடுத்து ஜீவிக்கும்போது பரிசுத்தமாக்கப்பட்ட அனுபவமும், (ரோ. 15:15) அவருடைய திவ்விய சுபாவமும் (2 பேது. 1:3, 4) நம்முடைய பங்காகும்.

இதனாலன்றோ இயேசுகிறிஸ்துவை விசுவாசித்துப் பின்பற்றினவர்களும், சீஷராக்கப்பட்டவர்களும் பிசாசுகளைத் துரத்தி, வியாதிகளைக் குணமாக்கி, எல்லாவற்றையும் விட்டு, சுவிசேஷ ஊழியம் செய்ய அழைக்கப்பட்டவர்

ளும், தங்களுடைய பொருளினால் ஊழியம் செய்த பெண்களும்; கற்புள்ளவளும், விசுவாசமுள்ளவளும், பாக்கியவதியும், தேவ தூதனால் வாழ்த்தப்பட்டவளும், பரிசுத்தாவியினால் உற்பவித்து கிறிஸ்துவைப் பெற்றெடுத்தவளும், கிறிஸ்துவின் உபதேசத்தைக்கேட்டு, அவரோடு நெருங்கி ஜீவித்தவளுமாகிய கன்னிமரியம்மாளும், உன்னதத்தின் பெலனால் தரிப்பிக்கப்பட வேண்டியது அதிக அவசிய மென்றும், அதைப் பெற்றுக் கொள்ளும் பரியந்தம் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப் போகாமல் காத்திருக்க வேண்டியது அவசிய மென்றும் கர்த்தரால் கற்பிக்கப்பட்டு (அப். 1:4,5) அவ்விதமாகவே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, (அப். 1:8; 2:4) கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபட்டார்கள். மேலும் அன்று பரிசுத்தாவியின் வரம் எருசலேமில் கூடியிருந்தவர்களாகிய சீஷர்களுக்கு மாத்திரமல்ல, மனுஷஜாதி யாவருக்கும் அவசியமென்றும் கண்டு, கொர்நேலியுவினுடைய வீட்டிலும் (அப். 10:44-46) அனலோடு ஊழியஞ் செய்து கொண்டிருந்த அப்பொல்லோவுடைய சீஷர்கள் மேலும் (அப். 18:24-28; அப். 19:1-6) பின்னும் இன்று பரியந்தமும் அதே அனுபவத்தைத் தேவன் காத்திருக்கும் தமது பிள்ளைகள் மேலும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

பிரிய ஆத்துமாவே, உனக்குப் பாவமன்னிப்பும், பரிசுத்தமும், பரிபூரணமும் தேவை என்று உணர்ந்து திரித்

துவத்தில் ஒருவரான பரிசுத்தாவியானவரைக் காத்திருந்து பெற்றுக்கொள்வாயானால் (யோ. 14 : 14-20) நீ அவருடைய சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்பட்டு, அவரையே மகிமைப் படுத்துவாய். (யோ. 16 : 7-14) இதினிமித்தம் தான் ஆதியிலே இரட்சிக்கப்பட்டவர்கள் மாத்திரம் சபையில் கர்த்தரால் சேர்க்கப்பட்டார்கள். (அப். 2:47) அப்படிப் பட்டவர்களே மாத்திரம் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தின் படியும், கட்டளையின் படியும் சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுத்தார்கள். (மத். 28:19,20; அப். 2:38,39)

## 2. இயேசு கிறிஸ்து சரீரத்திற்கு வைத்தியர்.

இயேசு கிறிஸ்து ஆத்தும நோய் தீர்க்கும் வைத்தியனாய் மாத்திரம் அல்ல, சரீர நோயைப் போக்கும் வைத்தியனாயும் இருக்கிறார். இதனால் தான் இஸ்ரவேல் ஜனங்களுக்கு "நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" என்று தேவன் சொன்னார். (யாத். 15:26; 23:35) இதை அறிந்தே ஏசாயா தீர்க்கத்தரிசியும் அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்,(ஏசா. 53:5)என்றும், அன்று இயேசுகிறிஸ்து வியாதியஸ்தர்களைக் குணமாக்கினது, நம்முடைய பெலவீனங்களை அவர் ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்பதையும் உறுதிப்படுத்திற்று. (மத். 8:13–17) மேலும்

யாக்கோபு அப்போஸ்தலனும், நீங்கள் சொஸ்தமடையும் படிக்கு ஒருவர் குற்றங்களை ஒருவருக்கு அறிக்கையிட்டு ஊக்கமான வேண்டுதல் பண்ணுங்கள் என்றும், சபையினுடைய மூப்பர்கள் வந்து அவனுக்காக எண்ணெய் பூசி ஜெபம் பண்ணக்கடவர்கள் என்றும் எழுத ஏதுவாயிற்று. இதற்கேற்க, விசுவாசமுள்ளவனாய் ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்றும், அவனால் சில அடையாளங்கள் நிறைவேறும் என்றும், அதில் ஒன்று வியாதி குணமாகுதல் என்றும் (மாற். 16:15-18) இதை மேலும் உறுதிப் படுத்துவதற்கேற்க, பரிசுத்தாவியினால் தேவன் மனுஷனுக்குக் கொடுக்கும் நவ வரங்களில் ஒன்று குணமாக்கும் வரம் என்றும் வேத வசனத்தில் உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. (1 கொரி. 12:8-9)

ஆகவே இயேசு இரட்சகர் சரீரத்திற்கும் ஆத்துமாவுக்கும் வைத்தியரும் இரட்சகருமாய் இருக்கிறார். இயேசு கிறிஸ்து வியாதிகளைக் குணமாக்கும் பல சந்தர்ப்பங்களில் அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதே அவர்கள் குணமாவதற்கு வழி என்று உணர்த்தியும் இருக்கிறார். ஆதலால் தான் 38 வருஷ வியாதியுள்ளவனைப் பார்த்து, "நீ சொஸ்தமானாய், அதிகக் கேடான தொன்றும் உனக்கு வராதபடிக்கு இனிப்பாவஞ் செய்யாதே" என்றார். (யோ. 5:16) மேலும், திமிர்வாதக் காரனைப் பார்த்து, "மகனே, திடன்

கொள்; உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது” என்றும் சொன்னார். (மத். 9:2) சங்கீதக்காரனும், இயேசு கிறிஸ்து உலகத்தில் வெளிப்படும் முன்னதாகவே, “அவர் உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி” என்றும்; தேவனாகிய கர்த்தரும்: நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு அவர் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, அவர் கட்டளைக்குச் செவி கொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால் நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன் என்று இஸ்ரவேல் ஜனங்களுக்குச் சொன்னார்.

இவ்விதமாய் நாம் வேத வசனங்களைப் பார்க்கும்பொழுது மனுஷன் கர்த்தரை விசுவாசிப்பதினாலும், கர்த்தருடைய வசனத்துக்குச் செவிகொடுப்பதினாலும், அவரோடு ஐக்கியப் படுவதினாலும் ஆத்துமாவிலும், சரீரத்திலும் சொஸ்தமடைகிறான். ஆதலால்தான் என் நாமத்திற்குப் பயந்திருக்கிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும் அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும் என்று மல்கியா தீர்க்கதரிசி மூலம் வெளிப்படுத்தப்பட்டது. (4:2) இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வசனத்தைவிட்டு விலகும் பொழுது வியாதி, பெலவீனம் அவர்களுக்கு சாபமாக வரும் என்று தேவன் சொன்னார். (உபா. 28 : 21, 22, 27, 28, 35, 58-61)

இவ்விதமாய் நாம் பார்க்கும்பொழுது தேவனுடைய தண்டனையில் ஒன்று வியாதியாய் இருக்கிறது. இயேசு கிறிஸ்து மரத்திலே தூக்கப்பட்டு தியாகமானதில் ஒன்று சாபத்தை நீக்குவதற்கு (கலா. 3:13) ஆகவே, பாவத்தை நீக்கினவரே பாவத்தினால் உண்டான சாபத்தையும் தண்டனையையும் நீக்குகிறார். ஆகவே ஓர் ஆத்துமா இயேசு கிறிஸ்துவை வைத்தியனாய் ஏற்றுக்கொள்ளும்போது, என் பாவத்தையும் சாபத்தையும் தீர்த்து ஒழித்தவர் இயேசுவே என்று உயர்த்திக் காண்பிக்கிறது. இயேசு கிறிஸ்துவும், "மகளே, உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவது" என்று சொன்னதுபோல அவர்களுடைய விசுவாசத்திற்கேற்க கிரியையும் நடப்பிக்கிறார்.

அப்படியானால் இயேசு கிறிஸ்துவுக்கேற்ற கிரியைகளில் அவரை வைத்தியராய் விசுவாசிப்பதும் ஒன்றாகும். மேலும் இயேசு கிறிஸ்து பெலவீனப்படுத்தும் ஆவி, அசுத்த ஆவி, பிறவிச் சப்பாணி, அங்கவீனர், வைத்தியரால் கைவிடப்பட்டவர்கள், இவர்களைக் குணமாக்கினதைப் பார்க்கும்போது அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது. அவரால் உண்டாகிய விசுவாசமே உங்கள் எல்லாருக்கும் முன்பாக இந்தச் சர்வாங்க சுகத்தைக் கொடுத்தது என்று (அப். 3:16) அப்போஸ்தலர் சொன்னதை எவ்வளவு ரூபகாரப்படுத்துகிறது!

அப்படியாஞல் தேவன், தம்மை ருசிப்பதற்கும், தம்மை மகிமைப் படுத்துவதற்கும், மனுஷன் தம்மோடு ஒப்புரவாகுவதற்கும், தேவன் எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருக்கிருர் என்று அவன் அறிவதற்கும், ஆத்துமாவின் மூலம் மாத்திரமல்ல, சரீரத்தின் மூலமாயும் போதிக்கிருர். ஆகவே இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் பாவங்களை மன்னிப்பதற்கும், பலியிடப்பட்ட அவருடைய சரீரம் அவனைப் பரிசுத்தமாக்குவதற்கும், அவருக்கு ஏற்பட்ட தழும்புகள் அவனைக் குணமாக்குவதற்கும் அவர் தூக்கப்பட்ட சிலுவைமரத்தின் மரணம் அவனுடைய சாபத்தை நிவிர்த்தியாக்குவதற்கும், மனுஷனேடு போராடின மரணத்தை ஜெயிப்பதற்கும் (எபி. 2:9,14, 15, 1 கொரி. 15:55-57) போதுமானதாயும், குத்தப்பட்ட விலாவிலிருந்து வடிந்த இரத்தமும், ஜலமும் அவனை மகிமைக்குள் கொண்டுபோகும் பரிசுத்தாவியைக் கொடுப்பதற்கும் வாக்குத்தத்தமாயிருக்கும் பொழுது, அவரை விசுவாசிப்பவன் அவரை விட்டு எங்கு போவான்? வேறு எதை நம்புவான்? ஆகவே இயேசு கிறிஸ்துவை அனுபவிப்பதே கிறிஸ்தவ ஜீவியத்தின் பூரண நோக்கம். ஆதலால்தான் உங்களைப் பகைக்கிற எல்லாச் சத்துருக்களின் கைகளினின்றும் நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும், நீதியோடும், எனக்கு ஊழியஞ் செய்யக் கட்டளையிடுவேனென்று சொன்னவர் இரட்சணியக்

கொம்பாகிய கிறிஸ்துவாக வெளிப்பட்டார். (லூக்கா 1:71, 74, 75)

## 3. இராஜாதி இராஜாவாக வரப்போகிறார்.

மேலும் இவ்விதம் இவ்வுலகத்தில் இருக்கும்பொழுதே, சரீரத்திலும் ஆத்துமாவிலும் இரட்சிப்பைக் கொடுத்தவர் மரணபரியந்தம் நடத்துகிறவர்: அதோடு மனுஷஜாதியை விட்டு விடாமல் அவனைத் தமது மகிமையின் இராஜ்யத்தில் சேர்த்துக் கொள்வதற்காக ஆகாயத்தில் வெளிப்படுவார். மணவாளன் மணவாட்டியைச் சந்திக்க வருவது போல இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தரும், ஏக சக்ராதிபதியுமாகிய இயேசு கிறிஸ்து, மணவாட்டியாகிய, கறை திரையற்ற பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாகத் தமக்குமுன் நிறுத்திக்கொள்ளத் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தபடியால்,(எபே. 5:27) இயேசு கிறிஸ்து தம்மை ஏற்ற மணவாளனாக சபைக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார். ஆதாமுடைய ஏற்ற துணை ஏவாளாயிருந்தாள். ஆதலால் அவர்கள் இருவரும் ஒன்றானார்கள். ஒருவரிலிருந்து ஒருவரைப் பிரிக்கமுடியாது. இவ்விதம் கிறிஸ்துவும் மனிதனும் ஒன்றாகி திரித்துவத்தோடு அன்னியோன்யமாகி "நம்மில் ஒருவனைப் போலானான்" என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு வருவதே கிறிஸ்து தம்மை ஒப்புக்கொடுத்த பரம இரகசியம். (எபே. 5:30-32)

கிறிஸ்துவும் சபையும் ஒன்ருஞல் "தன்தாயையும் தகப்பனையும் விட்டுப் பிரிந்து தன் மனைவியோடு இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்" என்று தேவன் சொன்னபடி, மனுஷன் உலகத்தில் இருக்கும் பொழுதே உலகத்திலும் அதன் ஆசை,இச்சைகளிலிருந்தும், (யோ.17:14-16) மாம்சமான சரீரத்தில் இருக்கும்பொழுதே தங்கள் ஆசைகளையும் இச்சைகளையும் சிலுவையில் அறைந்தும் (கலா. 5:24) பிசாசும் அதனுடைய வல்லமைகளும் கிரியை செய்கிற காலத்திலே அவைகளை ஜெயித்து கிறிஸ்துவின் மூலம் பூரண விடுதலை அடைந்தும்,ஜெயங்கொண்டவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாக புதிய பாட்டைப் பாடிக்கொண்டு பரிபூரண பேரானந்தத்தில் மூழ்கி, தேவனேடு சதாகாலம் ஆனந்திப்பார்கள். இதுவே பரிபூரண இரட்சிப்பு. இதற்கென்றே கிறிஸ்து தம்மை ஒப்புக் கொடுத்தார்.

இதை விசுவாசிப்பதும், இதை உபதேசிப்பதும், இதற்கென்று ஜீவிப்பதுமே உண்மையான சிலுவையைக் குறித்துள்ள மேன்மை பாராட்டுதல். இது இலவசமாய் மனுஷனுக்கு அருளப்பட்ட ஈவு. இதை அடைவதே நம்முடைய அழைப்பு. உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். அப்படியானல் இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்திற்கு உட்

படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும் 2 பேதுரு 1:10,11)

ஆகவே இக்கடைசிக் காலத்தில் தேவகிருபையானது நமக்கு நித்திய இரட்சிப்பை அளிக்கப் பிரசன்னமாகி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடியால், நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்துத் தெளிந்த புத்தியும், நீதியும், தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்தில் ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்திற்கும் மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. (தீத்து. 2:11-13) இதோ அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறதென்று சொல்லி இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வருகிறார்.

அவரைச் சந்திக்க ஆயத்தப் படுவோமாக! (வெளி. 22:12) பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிப்பதில்லையே. (எபி. 12:14) ஆகவே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலை தெய்வபயத்தோடே பூரணப் படுத்தி (2 கொரி. 7:1) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே

வாரும் என்போமாக. (வெளி. 22:20) அவரும் இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்று திருவுளம் பற்றியிருக்கிறார். (வெளி. 22:7)

## இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்காக ஜெபிக்க வேண்டிய விஷயங்கள். (எபேசியர் 1:15,16)

## முகவுரை

கிறிஸ்துவின் சரீரமான சபையானது சுவிசேஷத்தை உண்மையாய் விசுவாசித்து, மனந்திரும்பி, பாவம் மன்னிக்கப்பட்டு, பாவங்கள் போகக் கழுவப்பட்டு, அவரது மகிமையின் ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியினால் ஆராதித்து, ஆவிக்கேற்றபடி நடந்து, அவரது உபதேசத்தில் நிலைத்திருந்து, அவருக்கேற்ற கனிகளைக் கொடுத்து, அவரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் மணவாட்டியாகும். (மாற். 1:4, அப். 22:16, அப். 2:4, யோ. 4:23, யோ. 8:31, கலா. 5:16, பிலி. 1:10; 3:20.)

இச் சபையானது ஒரே விசுவாசமும், ஒரே உபதேசமும், ஒரே அபிஷேகமும், ஒரே பிரதிஷ்டையும், நோக்கமும் உடையதாய் இருந்தாலும், அதே சமயத்தில் கிறிஸ்து

வுக்குள் குழந்தைகளாயும், ஒன்றையும் அறிய வேண்டிய பிரகாரம் அறியாததும், பூரணப்படாததுமாய் இருக்கிற படியால், ஒருவரும் ஒருவரை அற்பமாய் எண்ணாது, கடிந்து கொள்ளாது, பிரிந்து போகாது, மற்றவர்களை நேசித்து, புத்தி சொல்லி, தன் தன் வளர்ச்சியைப் பூரணப்படுத்தி, மற்றவர்களையும் பூரணப்படுத்துவதாகும். இதற்கென்றே ஒரே சரீரமாக அழைக்கப்பட்டிருக்கிறோம். (எபி. 6:1, மத். 28:18-20, அப். 2:38-47, அப். 10:44-48, லூக்.9:23, பிலி. 3:21, 1கொரி. 15:51; 3:1; 13:12, எபே. 4:15; 4:2, 1தெச. 5:14.)

ஆகவே அன்பை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஜீவித்தால் மற்றவர்களையும் கர்த்தருக்குள் ஆதாயப்படுத்தமுடியும். தேவனும் தமது நாமத்தை மகிமைப்படுத்த முடியும். அவரது இராஜ்யம் இவ்வுலகில் அறியப்படவும் எதிர்நோக்கப்படவும் கூடும். இதையுணர்ந்து தேவனுடைய பிள்ளைகள் பின்வரும் காரியங்களுக்காக ஜெபிப்பார்களாக.

## ஜெபிக்க வேண்டிய விஷயங்கள்:—

I தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும் வளரும்படியாக. (கொலோ. 1:18,19; எபே. 4:11)

(a) **உபதேசம்.** (தீத். 2:1) மனந்திரும்புதல், பாவ மன்னிப்பு, விசுவாசம், ஸ்நானங்கள், உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு (எபி. 6:1,2)

(b) **ஜீவியம்.** (1பேது. 2:2,3) சபையிலுள்ள எல்லாவிதமான சுயதிருப்தியும் (லூக். 17:10) மேன்மை பாராட்டுதலும் நீங்கி (1கொரி. 4:7) ஆவிக்குரிய உண்மையான வளர்ச்சியும் அனுபவமும் காணப்பட (எபி. 5:12) விசேஷமாக (1) தாங்கள் நிலைத்திருக்கும் தேவனுடைய உபதேசத்திலும் (மத். 28:19,20; யோ. 8:31; அப். 2:38-47) (2) அடைந்த அறிவிலும் அனுபவத்திலும் (எபி.10:26; 32-34) (3) பெற்றுக்கொண்ட வரங்களிலும், (1கொரி.12: 8-10) (4) கிடைத்த தாலந்துகளிலும் பூரண வளர்ச்சியடையவும். (தாலந்துகள்: மத். 25:14-30; தியானம் ஆதி. 24:63; தனிஜெபம் மாற். 1:35; வேத ஆராய்ச்சி யோ.5:39 பரிசுத்த ஜீவியம் எபே. 4:24; ஜெயம் வெளி.2:7; தாழ்மை மத். 11:29; சுயவெறுப்பு லூக்.14:26; விசுவாசம் யூதா 20; நற்கிரியை மத். 5:16; முன்னேற்றம் பிலி. 3:12; ஊழியம் பிலி. 2:22; அன்பு 1தீமோ. 1:5; பாடுகள் ரோ. 8:18; சாட்சி சொல்லுதல் 2ராஜா. 5:3; தருமம் மத். 25:35,36 நன்றி லூக். 17 : 16, 17; ஸ்தோத்திரம் 1தெச. 5 : 18 முதலியவைகள்)

II **சபையில் காணப்படும் எல்லாவிதமான விசுவாசக் குறைவும் துரோகமும் நீங்க:—** பொதுவாய் (1) அறிந்த உபதேசத்திலும், 1 தீமோ. 4:16 (2) அழைக்கப்பட்ட உன்னத நிலைமையிலும், எபே. 4:1 (3) தேவன் பிரயோஜனப்படுத்தக்கூடிய மேன்மையான நிலைமையிலும் 2 தீமோ. 2:21 (4) கிறிஸ்துவினால் இம்மையிலும் மறுமையிலும் அடையக்கூடிய பாக்கியமான நிலைமையிலும், மத். 19:27-30ல் காணும் அவிசுவாசம் நீங்கி, விசுவாசத்தில் நிலைத்திருக்கவும்.

III **சபையில் காணப்படுகின்ற சீர்கேடுகள் நீங்கவும்**

a) ஊழியர்கள் உண்மையான விசுவாசமும் 2தீமோ 1:4; பிரதிஷ்டையும் ரோ. 12:2, சுயவெறுப்பும் பிலி. 2:5-8; தேவசித்தமுள்ள ஊழியர்களால் 1 கொரி. 1:1, தேவன் தமது சித்தப்படியுள்ள இடங்களில் அப். 16 : 6 - 10 தேவன் நியமித்த ஊழியத்தை மாத்திரம் எபே 3:18, தேவ பெலத்தினாலும் அப். 1:8, சகோதர அன்பினாலும் எபே. 4:2, நிறைவேற்றவும்,

b) விசுவாசிகள்: தங்கள் குடும்ப ஜீவியம் 1 தீமோ. 3:4, 5, உத்தியோகம், தொழில் 2தெச. 3:11, 12, இவைகளின் மத்தியில் தேவனுக்கேற்ற பரிசுத்தவான்களாய் காணப்பட்டு கொலோ. 3:12, சுத்த மனச்சாட்சியோடும்

1 தீமோ. 1:18; விசுவாசத்தின் உறுதியோடும் எபி. 10:22, புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக தேவனுடைய நற்கந்தங்களாய் 2 கொரி. 2:15, தேவனை வெளிப்படுத்தும் சாட்சிகளாய் விளங்கி அப். 2:32, கிறிஸ்துவாகிய தலையோடும் எபே. 1:23; அவருடைய சரீரமாகிய சபையோடும் கொலோ. 1:18, மாத்திரம் ஐக்கியப்பட்டு எபே. 3:18 மற்ற எல்லாவற்றிலும் நின்று பிரிந்தவர்களும் 2 கொரி. 6:14-18; அப். 2:40, விடுவிக்கப்பட்டவர்களும் சக. 2:7-8, ஏசா. 52:11ன்படி, சம்பந்தமில்லாதவர்களுமாய் விளங்கவும்.

IV **சபையைக் கண்காணிப்போரின் நிலையில்காணும் குறைவுகள் நீங்கவும், தேவசித்தமுள்ள ஊழியர்கள் மாத்திரம் அதற்கென்று தெரிந்தெடுக்கப்படவும்:-** கொலோ. 1:1, தேவன் நியமித்த ஊழியத்திற்கென்று மாத்திரம் தேவனால் ஏற்படுத்தப்படவும் எபே. 4:13, தேவனால் மாத்திரம் அவர்கள் பழக்கப்படவும் அப். 13:2, தேவன் இதற்கென்று விசேஷித்த கிருபையும் ஞானமும் கொடுக்கவும் ரோ. 1:7, தேவன் அவர்களைக் கொண்டு ஒழுங்குபடுத்தக்கூடிய வேலை ஸ்தலங்கள் ஆவிக்குரிய உணர்வுக் கூட்டங்கள், கன்வென்ஷன்கள், மற்றும் சபை பரவுதலுக்கும் முன்னேற்றத்திற்குமான எல்லா வேலைகளிலும் பிலி. 1:12, அதற்கான எல்லா உபதேசத்திலும் தேவ ஞானமும் 2 தீமோ. 2:26, பெலமும் 2 கொரி. 10:4, 5; தேவனால் அவர்களுக்கு அருளப்படவும்.

V கிறிஸ்தவ ஜீவியத்திலுள்ள குறைகள் நீங்கவும் ஒருவருக்கொருவர் அன்போடும் 1 யோ. 4:7; விசுவாசத்தோடும் 1 யோ. 5:13; கீழ்ப்படிதலோடும் எபி. 5 : 8, 9; சுத்த மனச்சாட்சியோடும் நடந்து எபி. 9:14; தங்களிலும் மற்றவர்களை மேன்மையாக எண்ணி, மற்றவர்களின் பெலவீனங்களைத் தன்னுடையது போல் நினைத்து ஜெபித்து கலா. 6:2; சீர்ப்படுத்தி எபி. 12:12,13; தாங்கள் புசித்தாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும் தேவநாம மகிமைக்கென்று செய்து ரோ. 14:6, கொலோ. 3:17; தாங்கள் பிழைத்தாலும் (சுகம், பெலன், பொருள், ஞானம் எல்லாவற்றாலும்) மரித்தாலும் கர்த்தருடையவர்கள் ரோ. 14:8, என்பதை மறந்து போகாது, தங்கள் சரீரத்தாலும், ஆத்துமாவாலும் கர்த்தரை மாத்திரம் மகிமைப்படுத்தவும் 1கொரி. 6:20 (சாட்சி சொல்லுதல், நற்கிரியை செய்தல் முதலியன)

**எப்படியாகிலும் சில ஆத்துமாக்களை யாகிலும் கர்த்தருடைய மகிமையில் கொண்டுவந்து சேர்க்க வேண்டும் என்ற (எபி. 2:10) மறுமையின் நோக்கத்தோடு மாத்திரம் ஜீவிக்க யூதா 22.**

சமாதானத்தின் தேவன்தாமே நம்மைப் பரிசுத்தமாக்குவாராக. கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக. எபே. 3:20, 1 தெச. 5:23, யூதா 24.

# புஸ்தக வாசிப்பு அவசியமா?

2 தீமோ.4:13ல் "புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோல் சுருள்களையும்......எடுத்துக் கொண்டுவா" என்று பவுல் கூறியிருப்பதையும், 1 தீமோ 4:13ல் "வாசிக்கிறதிலும்......ஜாக்கிரதையாயிரு" என்று பவுல் தீமோத்தேயுவுக்குக் கட்டளை யிட்டிருப்பதையும் கவனிக்கும் போது வாசிப்பு எவ்வளவு அவசியம் என்பதை விளங்கிக் கொள்ளுகிறோம்.

கமாலியேலின் பாதத்தருகே வேதத்தைத் திட்டமாய்ப் படித்து, பின் தேவ வெளிப்படுத்தலை தேவனிடத்திலே கேட்டுத் திட்டமாய்ப் படித்த (அப். 22:3, கலா. 1:14-18) பவுலுக்கே புஸ்தக வாசிப்பு அவசியமானால்; சிறு வயது முதல் மாயமற்ற விசுவாசத்தையும், இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனுக்கத்தக்க வேத எழுத்துக்களையும்,(2தீமோ 1:4-5; 3:14–15) கற்ற தீமோத்தேயுவுக்கே புஸ்தகவாசிப்பு அவசியமானல், நமக்கு எவ்வளவு அதிக அவசியம் என்பதை உணருவோமாக.

சரீரத்துக்குப் போஜனம் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு ஆவிக்குரிய ஜீவிய வளர்ச்சிக்கு ஆவிக்குரிய புஸ்

தகங்களும் அவசியமே. தேவபக்தியும், ஆவிக்குரிய அனுபவமும் உடைய பெரியவர்களோடு நாம் பழகினால் நமக்கு எவ்வளவு நன்மையோ, அவ்வளவு நன்மை ஆவிக்குரிய புஸ்தகங்களால் நமக்குண்டாகும்.

சிலர் நூற்றுக்கணக்கான புஸ்தகங்களை வாசித்துவிட்டோம் என்று தங்களைப் பெருமையாக எண்ணித் திருப்தி செய்து கொள்ளுகின்றனர். அதன் பின்னர், முன் வாசித்த புஸ்தகங்களைக் கண்ணால்கூடப் பார்ப்பதில்லை. அதனால், அப்புஸ்தகங்களைப் பத்திரப் படுத்துவதுமில்லை. ஒரு புஸ்தகத்தைப் பலதடவை ஆராய்ந்து படித்துத் தியானித்தாலொழிய அதன் நுண் பொருள் விளங்குவதில்லை. ஆகையால் புஸ்தகங்களைப் பத்திரப்படுத்துங்கள், அப்படிப்பத்திரப்படுத்தி நம் வீட்டில் ஒரு புத்தகக் களஞ்சியம் ஏற்படுத்தினால் நமக்குமட்டுமல்ல, நம் பிள்ளைகளுக்கு வருங்காலத்தில் அவை மிகப்பயன்படும். நம் வீட்டிற்கு வருகிறவர்களுக்கும் போதனை அளிக்கும். நாம் பேசி விளங்க வைக்கமுடியாத பல ஆவிக்குரிய விவரங்களை அந்நூல்கள் அவர்களோடு பேசும்.

சத்திய வேத போதனைகள் கிடைக்காத காலமும், எவ்வித ஆவிக்குரிய நூல்களும் பிரசுரிக்கக் கூடாது என்ற தடையுத்தரவு இடும் காலமும் சீக்கிரம் வரக்கூடும். வெளியரங்கமாய் ஊழியம் செய்யக்கூடாது என்ற காலத்திலும்

பயன்படத்தக்க விதத்தில் புஸ்தகங்களைத் தாங்கள் வாங்குவதுமன்றி, மற்றவர்களையும் வாங்க ஏவி உற்சாகப்படுத்துங்கள்.

அனுவசியச் செலவுகளைக் குறைத்து நல்ல புஸ்தகங்களை வாங்குங்கள். அனுவசியப்பேச்சு, அனுவசிய நேரப்போக்கு விளையாட்டுக்கள், அனுவசியப் பழக்க வழக்கங்கள் முதலியவற்றைக் குறைத்து தனி ஜெபம், தனித்தியானம், தனி வாசிப்புகள், வேத பாராயணம் முதலியவைகளுக்கு நேரத்தைக் கொடுங்கள். நரகத்தில் விட்டாற்றியும் விடுமுறையும் கிடையாதே. இவ்வநித்திய உலக வாழ்வைக்கடந்து, நித்திய வாழ்வுக்குள் பிரவேசிக்கும் வேளை நினையா நேரம் திடீரென வந்துவிடுமே. அப்பொழுது என்ன செய்வோம்? கிருபையின் காலத்தை இழந்து போகாதிருப்போமாக.

(ரோமர் 2:4)

# விசுவாசிகளுக்கு விருந்து போன்றதும், ஆத்துமப்பசிதீர்க்கும் அமிர்தபோஜன முமான பக்தி நூல்கள்:-

1 இரட்சிப்பு, அதின் நிச்சயம், அதின் சந்தோஷம் (By ஜார்ஜ் கட்டிங்) விலை அணா 0—3—0

*கிறிஸ்தவ சபைகளெங்கும் ஆத்துமாவைப்பற்றிய நிர் விசாரமும்,உலக ஆடம்பரமும் பெருகி,கிறிஸ்தவ மூலாதார அனுபவமான இரட்சிப்பைப் பற்றிய கேள்வியும் விசுவாச மும் அற்றுப்போன இக்காலத்தில் இரட்சிப்பைப் பற்றிய அறிவைப் புகட்டும் அரிய நூல் இது. இரட்சிப்பைத்தனக் குச் சொந்தமாக்கிக் கொள்ளாத எவனும் கிறிஸ்தவனில்லை, இரட்சிக்கப்படாதவர்களே! நாங்களும் கிறிஸ்தவர்களென, தங்களைத் திருப்தி செய்து, வீண் நியாயம் பேசி, வாளுளை வீணுக்கிவிடாதீர்கள். இந்நூலையும், இதுபோன்ற பல நூல் களையும் படித்துப் பயன் பெற்றுக் கொள்ளுங்கள்.*

*இரட்சிக்கப்பட்டோம் என்று சொல்லிக் கொண்டு, மருண்டுருண்டு தளர்ந்து தள்ளாடும் விசுவாசிகளே! இரட் சிக்கப்பட்டப்பின் ஆவிக்குரிய வாழ்க்கையில் தேர்ச்சிபெறத் தக்கதான சத்தியங்களை ஆதாரபூர்வமாகப் படித்தறிந்து வளர்ச்சியடையுமாறு வேதம் கூறியும், (1 தீமோ. 2:4, 1பே*

2:3; 2 பேது. 3:18) அதை மறுத்து, மற்றவர்களும் இடறத் தக்கதாக ஜீவிக்கிறீர்களே. அது ஏன்? ஆவிக்குரிய பல உண்மைகளைத் தெரிந்து கொள்ளுதல் விசுவாசத்தில் உறுதிப்படுத்தி இடறலற்றவர்களாய் ஜீவிக்க நம்மை ஞானமுள்ளவர்களாக்கும். ஆகையால் ஆவிக்குரிய நூல்களை வாங்கி தங்களுக்குச் சொந்தமாய்ச் சேர்த்து வைத்துக் கொண்டு சமயம் கிடைக்கும் போதெல்லாம் வாசித்துச் சிந்தியுங்கள்; அப்பொழுது, வேதாகமத்தில் தெளிவு பெற்று, உங்கள் மனம் பிரகாசிப்பிக்கப்பட்டு விசுவாச ஜீவியத்தில் முன்னேறுவீர்கள். அநேக ஆத்துமாக்களுக்குப் பிரயோஜனமாயிருப்பீர்கள்.

2 **சாதுசுந்தர்சிங் செய்த 22 பிரசங்கங்கள்** ரூ. 1—0—0

பெரிய சாஸ்திரிகளாலும் விளக்கமுடியாத வேத இரகசியங்களை, பாலருக்குப்பால் போன்று, யாவருக்கும் விளங்கத்தக்கதாக பல இனிய எளிய உதாரணங்களைக் கொண்டும், வேதவசனங்களைக் கொண்டும், தனது சொந்த அனுபவங்களைக் கொண்டும் விளக்கியிருக்கிறார். சாதுவைப் பற்றிய நூல்களின் அருமையை அறிந்து கொள்ளவேண்டுமானால் முதன்முதல் அவருடைய சரித்திரத்தை நன்றாய்ப் படியுங்கள். பின்னர் இதைப் படியுங்கள்.

3 **சாதுசுந்தர்சிங் சரித்திரம்** ரூ. 1—0—0

4 **திருவடி உபதேசம்** (By சாது சுந்தர்சிங்) ரூ. 0—8—0

இதில், சுந்தர்சிங் இயேசு இரட்சகரை முகமுகமாய்த் தரிசித்தபோது பல கேள்விகளைக் கேட்டார். அதற்கு இரட்சகர் கொடுத்த பதிலை யாவருக்கும் விளங்கத்தக்கதாக சுந்தர்சிங் தாமே கேள்வியும் பதிலுமாக எழுதியிருக்கிறார்.

**5 ஆவிக்குரிய ஜீவிய விளக்கம்** ரூ. 0—8—0

இதுவும் சுந்தர்சிங் தாமே எழுதிய நூல் இதற்கு லண்டன் பிஷப் அவர்கள் அழகான முகவுரை எழுதியிருக்கிறார்கள். ஆவிக்குரிய வாழ்க்கையின் இரகசியத்தை ஏற்ற உதாரணங்களால் அழகாக விளக்குகிறார்.

**6 ஸ்திரிகள் நகை போடலாமா?** அணா 0—1—0

இக்கேள்வி அநேகருக்கு வியப்பைத் தரும். ஆயினும் அறிவும், அனுபவமும் முதிர்ந்த பெரியோர் என்ன கூறியிருக்கிறார்கள் என்பதைக் கவனிப்பது நலமே. ஆகையால், சில பெரியோருடைய முடிவை இதில் கோர்த்திருக்கிறது. அவற்றில் கல்விக் களஞ்சியமெனப்பேர்பெற்றவரும். சிறந்த கிறிஸ்தவ பக்தனும், மார்க்க எழுப்புதல் பிரசங்கியுமான Rev. T. உவாக்கர் M. A., அவர்கள் கூறியது மிகச் சிறந்ததாகும். இது அநேகருக்குப் பைத்தியம்போல் தெரிந்தாலும், உற்றுணர வேண்டிய உண்மைப் பொருள் இதில் உண்டு.

**7 பொன்நூல்** ரூ. 0—4—0

இது யாவருக்கும் இனிய தோழன். எங்கு சென்று

லும் சட்டைச் சேப்பில் வைத்துக்கொண்டு போகத்தக்கதா கச் செய்யப்பட்டிருக்கிறது. பாலியர், வாலிபர், முதியோர், கன்னியர் யாவருக்கும் இது ஒரு ஞானப்புதையல் போன்றதே. இந்நூலை வாசித்துப் பயனடைந்த ஓர் இந்து சாஸ்திரி இதற்குப் புகழுரை எழுதியிருக்கிறார்.

**8 சார்ல்ஸ் பின்னி சரித்திரமும், மார்க்க எழுப்புதலைப்பற்றிய அவரது பிரசங்கங்களும்** ரூ. 0—8—0

இது, யோ. 14:12 "என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" என்ற இரட்சகரின் வாக்கை மெய்ப்பிக்கிறது. பயனுள்ள வாழ்க்கையும், பயனுள்ள ஊழியமும் செய்யும் வகையை இதில் காணுகிறோம். அவருடைய சரித்திரம் அதிசயமானது.

**9 D. L. மூடியின் பிரசங்கங்கள்** ரூ. 1—0—0

இவர் பேர் பெற்ற பிரசங்கி. இவருடைய பிரசங்கம் யாவரையும் விழிக்கச் செய்து குணப்படுதலுக்கும், பரிசுத்தத்திற்கும் நேராக நடத்துகிறது. இதைக் கவனமாய் வாசிக்கிறவர்களுக்கே இதனருமை புலப்படும். 1884-ம் ஹூ பதிப்பிக்கப்பட்ட இந்நூல் 1955-ம் ஹூல் திரும்பவும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

**10 பிரதான வரமாகிய அன்பு** அணா 0—3—0

**11 சாருப மகிமை விலாசம்** அணா 0—2—0

இவ்விரு புத்தகங்களும் ஹென்ரி டிரமண்ட் என்பவரால் எழுதப்பட்டது. இவர் மூடியின் சீஷனும் சிறந்த சாஸ்திரியுமானவர். கிறிஸ்தவ மார்க்கத்தின் பிரதான சத்தியங்களை விளக்கியிருக்கிறார். (சா தேவன், ரூபம் = சாயல், விலாசம் = சேரும் வழி.)

**12 சிலுவை சுமந்தோன்** அணா 0—6—0

இது சிலுவையின் ஜீவியம் செய்வதைப் பற்றி 12 படங்களினாலும், பல வேத வசனங்களாலும் தெளிவுகொடுக்கிறது. சிலுவைப் பக்தி மிகுந்த இக்காலத்துக்கு ஏற்றநூல். கஷ்ட ஜீவியத்துக்குப் பயந்தவர்களே நீங்கள் யாவரும் இதை வாசியுங்கள். சிலுவையை நீங்கள் சுமந்தால், சிலுவை உங்களைச் சுமப்பதை அறிவீர்கள்.

**13 பரமகுரு** அணா 0—2—0

இந்துமத நூலாதாரங்கொண்டு இயேசுவே மெய்த்தேவனும், இரட்சகரும், குருவுமாயிருக்கிறார் எனக்காட்டப்பட்டிருக்கிறது. இதைப் பொறுமையோடும், கவனத்தோடும் படித்தல் நலம். இந்துசமயத்தின் உட்பொருள் இயேசுஇரட்சகர் என்பது தெரியாமல் இந்துக்கள் வழி தவறி விட்டார்கள். கிறிஸ்தவ மூலதாரப் போதனை இதில் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், கிறிஸ்தவர்கள் யாவரும் இதைப் படிக்க வேண்டும்.

**14 சுவிசேஷப் பிரசங்கங்கள்** ரூ. 1—8—0

(By Rev. S. பரமானந்தம்)

சுத்த சுவிசேஷ விளக்கமாகும் இது. புற மதத்தினரும் விளங்கிக் கொள்ளத் தக்க விதத்தில் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது.

**15 நல்ல சிநேகிதர்கள்** அணு 0—1—0

இச்சிறு நூல் நல்ல சிநேகிதரின் அவசியத்தையும், நல்ல சிநேகிதர் யார் என்பதையும், அவர்களை நமக்குச்சொந்தமாக்கிப் பயனடைவதையும் தெரிவிக்கிறது. மாணவரும் இதனால் பயனடைவார்கள்.

**16 ரோமான் மார்க்க சீர்தூக்கல்** அணு 0—6—0

பேர் பெற்ற சாஸ்திரியாரான தீரன் லூமிஸ் தேசிகர் இதை எழுதியிருக்கிறார். இது ஒரு சிறந்த வேத சாஸ்திர நூல். மூன்றாவது பதிப்பாக 1894ம்வூ இது வெளிவந்தது. நாலாவது பதிப்பாக 1953வூ வெளி வந்திருக்கிறது. தற்காலத்தில் நாகரீக கிறிஸ்தவ வேஷம் அணிந்து சபைக்குள் நுழைந்து வரும் அஞ்ஞானங்களைக் கண்டு பிடித்து விலக்க நமக்கு உதவிபுரியும் ஆராய்ச்சி நூலாகும்.

**17 சிறந்த தேவ ஊழியன்** ரூ. 0—8—0

(By G. S. Eddy)

எடி பேசினால் "இடி விழும்" என இவரைப்பற்றிச் சொல்லப்படுவதுண்டு. இவர் சிறந்த சுவிசேஷப் பிரசங்கி,

தமிழ் நாட்டில் இவர் செய்த ஊழியத்தால் அநேகர் புத்துயிர் பெற்றார்கள். இவர் எழுதிய வேதஆராய்ச்சி நூல்கள் ஜீவியத்துக்கு மிகப் பிரயோஜனமாயிருக்கிறது. இந்நூலும் தேவ ஊழியருக்கு மட்டுமல்ல, கிறிஸ்தவர்கள் யாவருக்கும் தெளிவுதரத்தக்கது.

**18 பெந்தேகோஸ்தே ஆவி** அணா 0—10—0

கனம் அசரியா பிஷப்பவர்கள் 1903௵ எழுதிய அருமையான நூல். பரிசுத்த ஆவியைப்பற்றி பாரபக்ஷமின்றி வேதத்தைக் கொண்டு விவரித்திருக்கிறார்கள். இதை வாசித்தவர்களில் பலர் புதிய உற்சாகமும் தெளிவும் பெற்று ஜீவிக்கிறார்கள்.

# கைலாச மகா ரிஷி சரித்திரம்

இது சாது சுந்தர்சிங் கூறியபடியே எழுதப்பெற்றது. இதில் சாது சுந்தர்சிங் படமும், அவரது சரித்திரச் சுருக்கமும், அந்தரங்கச் சன்னியாசி மிஷன்வரலாறும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தால் குணப்பட்டவர்களும், உணர்ச்சியடைந்து ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறியவர்களும் அநேகர். இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய அவசியமான புத்தகம். (இப்புத்தகம் ஆங்கிலத்தில் 1 ரூபா விலைக்குக் கிடைக்கும்)

விலை அணா 8

இப்புஸ்தகங்கள் கிடைக்கும் விலாசங்கள்:-

1 S. தாமஸ் இரத்தினம், நாசரேத் Po,
திருநெல்வேலி ஜில்லா.

2 டையோசிஸன் புக் டெப்போ, பாளையங்கோட்டை.

3 லண்டன் மிஷன் புக் டெப்போ, நாகர்கோவில்.

4 டையோசிஸன் புக் டெப்போ, மதுரை.

டாஸ் பிரஸ், நாசரேத்; 11—7—1955; Cs. 3000.